**திருப்பரங்குன்றம், ஜூலை 2:** சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள மடப்புரம் கோயில் காவலாளி தனிப்படை போலீஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில், புகார் தாரர்களான நிகிதா, அவரது தாய் சிவகாமி அம்மாள் ஆகியோர் மீது அரசுப் பணி வாங்கித் தருவதாக பண மோசடி செய்த வழக்கு திருமங்கலம் காவல் நிலையத்தில் கடந்த 2011-இல் பதிவு செய்யப்பட்டது.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தை அடுத்த திரளி பகுதியைச் சேர்ந்தவர் ராஜாங்கம். இவரிடம் திருமங்கலத்தை அடுத்த ஆலம்பட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயபெருமாள், அவரது மனைவி சிவகாமி அம்மாள், மகன் கவியரசு என்ற வைபவ் சரண் கவி, மகள் நிகிதா உள்ளிட்டோர் கடந்த 2010, டிசம்பர் மாதம் தங்களுக்கு அப்போதைய துணை முதல்வர் மு.க. ஸ்டாலினின் உதவியாளர் தங்களுக்குத் தெரிந்தவர் என்றும், அவர் மூலமாக தங்களது உறவினர்களுக்கு அரசுப் பணி வாங்கித் தந்ததாகவும் கூறி நம்ப வைத்தனர்.

மேலும், ராஜாங்கம் மகன் தெய்வத்துக்கு ஆசிரியர் பணி வாங்கித் தருவதாக ரூ. 9 லட்சமும், திரளி பகுதியைச் சேர்ந்த வினோத்குமாருக்கு கிராம நிர்வாக அலுவலர் பணி வாங்கித் தருவதாகக் கூறி ரூ. 7 லட்சமும் என மொத்தம் ரூ. 16 லட்சத்தை ஜெயபெருமாள் குடும்பத்தினர் வாங்கினர்.

இதனிடையே, அரசுப் பணி வாங்கித் தராததால், சம்பந்தப்பட்டவர்கள் பணத்தைத் திரும்பக் கேட்ட போது சிவகாமி அம்மாள் குடும்பத்தினர் கொலை மிரட்டல் விடுத்தனராம்.

இதுகுறித்து திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் ராஜாங்கம், தெய்வம், வினோத்குமார் ஆகியோர் கொடுத்த புகாரின் பேரில், ஜெயபெருமாள், அவரது மனைவி சிவகாமி அம்மாள், மகன் கவியரசு என்ற வைபவ் சரண் கவி, மகள் நிகிதா உள்ளிட்ட 6 பேர் மீது கடந்த 10.5.2011-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

**மற்றொரு வழக்கு:** மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது புகாரளித்த நிகிதா, கல்லூரியில் உதவி பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் செக்கானூரணியை அடுத்த தேங்கில்பட்டி பகுதியைச் சேர்ந்த மொக்கமாயன் மகன் செல்வம், முத்துகுமார், மணிமேகலை ஆகிய மூவருக்கும் அரசு வேலை வாங்கித் தருவதாக ரூ. 25 லட்சத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றினாராம். இந்த பண மோசடி குறித்து திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் கடந்த 2011 -ஆம் ஆண்டு சிவகாமி அம்மாள், நிகிதா, அவரது குடும்பத்தினர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பண மோசடி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிவகாமி அம்மாள், நிகிதா ஆகிய இருவரும் போலீஸார் தாக்கியதில் கொல்லப்பட்ட மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது நகையைத் திருடியதாக புகார் அளித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்துடைப்பு நாடகங்களை நடத்தும் எடப்பாடி பழனிசாமி: திமுக விமர்சனம்

**சென்னை, ஜூலை 2:** திருப்புவனம் விவகாரத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி கண்துடைப்பு நாடகங்களை நடத்துவதாக திமுக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இளைஞர் அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமாருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாக பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, கைது நடவடிக்கைக்கும் உள்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இரண்டே நாள்களில் சட்டரீதியான பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதில் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் நிகழாதது. அதை மு.க.ஸ்டாலின் நிறைவேற்றிக் காட்டியுள்ளார்.

அதிமுக ஆட்சியின்போது, சாத்தான்குளம், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தொடர்பாக ஆணவத்தோடும், அலட்சிய மனப்பான்மையோடும் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார். அப்போது நீதி எங்கே போனது? அவரது கண்துடைப்பு நாடகங்களை யாரும் நம்ப மாட்டார்கள். நீதியை நிலைநாட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார் ஆர்.எஸ்.பாரதி.


**மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - II**
**சென்னை-ன் முன்பாக**
(6-வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006)
**அசல் விண்ணப்ப எண்.65 / 2025**

**M/s. பஞ்சாப் நேஷனல் பேங்க்,**
எண்.769, ஸ்பென்சர் பிளாசா, தரை தளம், மவுண்ட் ரோடு, சென்னை - 600 002.
IFSC குறியீடு: PUNB0016510
**தற்போது மாற்றப்பட்டுள்ள :**
வட்டார அலுவலகம் சாஸ்த்ரா மையம், ஸ்பென்சர் பிளாசா, இரண்டாவது தளம், அண்ணா சாலை, சென்னை - 600 002
பிரதிநிதியாக அதன் முதன்மை மேலாளர்
M. வேலாயுதம்
IFSC CODE: PUNB0361900 ... மனுதாரர்
-எதிரிடை-
**திரு.E. யோகேஷ்** த/பெ.திரு.இளங்கோவன் ... எதிர்மனுதாரர்

மேற்குறிப்பிட்ட மனுதாரர் வங்கி **18.01.2024** அன்று வரை **ரூ.63,80,008.10 (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து எண்பதாயிரத்து எட்டு மற்றும் பைசா பத்து மட்டும்)** வசூலிப்பதற்காக இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முன்பு மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளது.

அழைப்பாணைகள் சாதாரண முறையில் சேவை அளிக்கப்படாததால் மாற்று முறை சேவைக்கு இந்த தீர்ப்பாயத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே நாளிதழின் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

ஆகையால் **21.08.2025 அன்று காலை 11.00 மணிக்கு** மாண்புமிகு இந்த தீர்ப்பாயத்தின் முன்பு நேரிலோ அல்லது தாங்களால் அறிவுறுத்தப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுக்கான நிவாரணங்களை ஏன் வழங்கக்கூடாது என்று எழுத்துப்பூர்வமாக காரணத்தை காட்டுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும்பட்சத்தில் மனு / மேல்முறையீடு தாங்கள் இல்லாமலேயே சட்டப்படி விசாரித்து மற்றும் தீர்மானிக்கப்படும்.

**02.07.2025 அன்று எனது கையொப்பம் மற்றும் முத்திரையின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.**
தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி
பதிவாளர்
கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை

**மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - II**
**சென்னை-ன் முன்பாக**
(6-வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006)
**அசல் விண்ணப்ப எண்.103 / 2025**

**M/s. பஞ்சாப் நேஷனல் பேங்க்,**
புதிய எண்.4 (பழைய எண்.15), கவுதம் டவர்ஸ், திரு.வி.க. சாலை, ஜெனரல் பேட்டர்ஸ் சாலை, சென்னை, தமிழ்நாடு, அஞ்சல் குறியீடு - 600 002
IFSC குறியீடு: PUNB0030600
**தற்போது மாற்றப்பட்டுள்ள:**
வட்டார அலுவலகம் சாஸ்த்ரா மையம், ஸ்பென்சர் பிளாசா, இரண்டாவது தளம், அண்ணா சாலை, சென்னை - 600 002
பிரதிநிதியாக அதன் முதன்மை மேலாளர்
M. வேலாயுதம்
IFSC CODE: PUNB0361900 ... மனுதாரர்
-எதிரிடை-
**திருமதி.S.லலிதா** க/பெ.கார்த்திக்
மனை எண்.1187, ப்ளாட் எண்.S1, இரண்டாவது தளம், வேதாச்சலம் நகர், பழைய எண்.193, புதிய எண்.112, ஆதனூர் கிராமம், சென்னை - 603 202.
**மேலும்:** எண்.120, 3வது தெரு, மூகாம்பிகை நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை தமிழ்நாடு - 600 053 ... எதிர்மனுதாரர்

மேற்குறிப்பிட்ட மனுதாரர் வங்கி **04.03.2024** அன்று வரை **ரூ.56,28,716/- (ரூபாய் ஐம்பத்து ஆறு லட்சத்து இருபத்து எட்டாயிரத்து எழுநூற்று பதினாறு மட்டும்)** வசூலிப்பதற்காக இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முன்பு அசல் விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளது.

அழைப்பாணைகள் சாதாரண முறையில் சேவை அளிக்கப்படாததால் மாற்று முறை சேவைக்கு இந்த தீர்ப்பாயத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே நாளிதழின் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

ஆகையால் **07.07.2025 அன்று காலை 11.00 மணிக்கு** மாண்புமிகு இந்த தீர்ப்பாயத்தின் முன்பு நேரிலோ அல்லது தாங்களால் அறிவுறுத்தப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுக்கான நிவாரணங்களை ஏன் வழங்கக்கூடாது என்று எழுத்துப்பூர்வமாக காரணத்தை காட்டுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும்பட்சத்தில் மனு / மேல்முறையீடு தாங்கள் இல்லாமலேயே சட்டப்படி விசாரித்து மற்றும் தீர்மானிக்கப்படும்.

**23.06.2025 அன்று எனது கையொப்பம் மற்றும் முத்திரையின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.**
தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி
பதிவாளர்
கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை



தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். அ4/3228648/2025 நாள் : 01.07.2025
ஒப்படைக்கப்பட்ட மானிய வருவாய் திட்டம் (SCPAR) - 2025-26
களக்காடு ஊராட்சி ஒன்றியம் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டுதல்

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி மாவட்டம் அவர்களால், ஒப்படைக்கப்பட்ட மானிய வருவாய் திட்டம் (SCPAR) - 2025-26 திட்டத்தின்கீழ் களக்காடு ஊராட்சி ஒன்றியம் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டும் பொருட்டு மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறை முறையில் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 03.07.2025 முதல் 18.07.2025 வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **18.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை**
5. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **18.07.2025 பிற்பகல் 4.00 மணி முதல்**

செ.ம.தொ.இ/3359/ஒப்பந்தப்புள்ளி/2025
திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி



தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை
**அருள்மிகு விஜராகவப்பெருமாள் திருக்கோயில்**
திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்
இணையவழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.01/2025 நாள் - 01.07.2025
ஒப்பந்த வகை : LUMPSUM

அருள்மிகு விஜயராகப்பெருமாள் திருக்கோயில், திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம், செயல் அலுவலர் அவர்கள், திருக்கோயிலில் கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற நடப்பில் உள்ள திருக்கோயில் திருப்பணிகளின் அனுபவம் வாய்ந்த ஸ்தபதி / சிற்பிகளிடமிருந்து தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in) – மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு-ரூ. | முன் வைப்புத் தொகை-ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் | முன் வைப்புத் தொகை வழங்க வேண்டிய பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் திருப்புட்குழி கிராமம், அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயிலில் பழுது பார்த்து புதுப்பித்தல் பணி | 67,26,240/- | 43,700/- | 9 மாதங்கள் | செயல் அலுவலர், அருள்மிகு விஜயராகப்பெருமாள் திருக்கோயில், திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் |

முக்கிய நாட்கள்
1. இணைய வழியில் இலவசமாக ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்ய : 04.07.2025 முதல் 22.07.2025 பிற்பகல் 02.00 மணி வரை
2. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை தரவேற்றம் செய்ய : **22.07.2025 பிற்பகல் 02.00 மணி வரை**
3. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : **22.07.2025 பிற்பகல் 03.00 மணிக்கு**

முக்கிய விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (https://tntenders.gov.in)–ல் மட்டுமே பெறவேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

செ.ம.தொ.இ/3397/ஒப்பந்தப்புள்ளி/2025
செயல் அலுவலர், அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயில்,
திருப்புட்குழி கிராமம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்



**வட்டாட்சியர், வண்டலூர்**
**பொது ஏல அறிவிப்பு**
**தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம் 1864**
ந.க.எண்.2607/2023/அ4 நாள்.30.06.2025

வருவாய் வசூல் சட்டம் 1864, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கிளாம்பாக்கம் கிராமம், M/s.Metroline Promoters Pvt Ltd (Rep by its Amit Gupta) என்ற நிறுவனம் அடுக்குமாடி குடியிருப்புகளை முன்பதிவு செய்த நபர்களுக்கு குறித்த காலத்தில் ஒப்படைக்காத காரணத்தினால் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் (முறைபடுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) சட்டம் 2017 விதி 26–ன் படி நிறுவனத்தின் அசையா சொத்துக்களின மீது பாதிக்கப்பட்ட 13 நபர்களுக்கு வருவாய் வசூல் சட்டம் மூலம் இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தர Tamil Nadu Real Estate Regulatory Authority Chennai, Recovery warrant 1)E.P.No.17/2017 in C.C.P.No.14/2019 dt.24.12.2021 2)E.P.No.15/2021 in C.C.P.No.272/2019dt.24.12.2021 3)E.P.No.16/2021inC.C.P.No.213/2019dt.24.12.2021 4)E.P.No.14/2021inC.C.P.No.147/2019 dt.10.01.2022 5)E.P.No.44/2021 in C.C.P.No.112/2020 dt.08.04.2022 6)E.P.No.88/2021 in C.C.P.No.54/2020 dt.24.08.2020 7) E.P.No.45/2023 in C.C.P.No.65/2021 dt.13.10.2023 8)E.P.No.34/2023 in C.C.P.No.277/2021 dt.10.10.2023 9) E.P.No.33/2023 in C.C.P.No.120/2021 dt.10.10.2023 10)E.P.No.35/2023 in C.C.P.No.278/2021 dt.10.10.2023 11) E.P.No.45/2021 in C.C.P.No.113/2019 12)E.P.No.46/2021 in C.C.P.No.106/2019 13) E.P.No.32/2023 in C.C.P.No.89/2021 dt.10.10.2023ன் படி மேற்படி நிறுவனத்தின் மீது பாக்கித் தொகையினை வசூல் செய்யவும் TNRERA உத்தரவினில் குறிப்பிட்டுள்ள புலஎண்.174/2A1 விஸ்தீரணம் 0.25.30 ஏர்ஸ் பட்டா எண்.1041 தி.ள்.சாகா மோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் புலஎண்.174/3 விஸ்தீரணம் 0.39.50 ஏர்ஸ் பட்டாஎண்.1039 தி.ள் கிராண்ட் பில்ட்கான் பிரைவேட் லிமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) புலஎண்.187/1A1 விஸ்தீரணம் 0.59.30 பட்டாஎண்.1040 தி.ள்.சேஜ் பில்ட் வெல் பிரைவேட் லிமிடெட் (1) தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) புலஎண்.187/2 விஸ்தீரணம் 1.21.50 பட்டா எண்.1042 தி.ள்.சேஜ் பில்ட் வெல் பிரைவேட் லிமிடெட் (1) தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) என்ற நிறுவனங்களிடமிருந்து வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கிளாம்பாக்கம் கிராமம், 1. M/s.Metroline Promoters Pvt Ltd (Rep by its Amit Gupta), 2. தி.ள்.சாகா மோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் 3. தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் 4. தி.ள்.சேஜ் பில்ட் வெல் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனங்களிடமிருந்து நிலுவைத் தொகை வருவாய் வசூல் சட்டம் 1864ன் படி வசூல் செய்யவும் TNRERA உத்தரவினில் மேற்படி நிறுவனத்தின் கட்டிடம் பூமிக்கடியில் இரண்டு அடுக்காகவும் மேல்தளத்தில் இரண்டு அடுக்குகளுடன் மிகப்பெரிய அளவில் வணிக வளாகம் (Mall)- ஆக அமைந்துள்ளது.

மேற்படி நிறுவனத்திடமிருந்து பாதிக்கப்பட்ட 13 நபர்களுக்கு பாக்கித்தொகையினை வழங்கும் பொருட்டு கீழ்கண்ட சொத்துக்கள் ஏலம் விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| சர்வே எண் | வகைப்பாடு | பரப்பு (ஹெக்) | தீர்வை (ரூ.பை) | பட்டா எண் மற்றும் பட்டாதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 174/2A1 | புன்செய் | 0.25.30 | 0.80 | 1041. தி.ள்.சாகா மோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட்(2) |
| 174/3 | புன்செய் | 0.39.50 | 1.23 | 1039.தி.ள்.கிராண்ட் பில்ட்கான் பிரைவேட் லிமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி.ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) |
| 187/1A1 | புன்செய் | 0.59.30 | 1.80 | 1040.தி.ள்.சேஜ் பில்ட் வெல் பிரைவேட் லமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) |
| 187/2 | புன்செய் | 1.21.50 | 3.75 | 1042. தி.ள்.சேஜ் பிராபர்ட்டீஸ் பிரைவேட் லமிடெட் (1), தி.ள்.வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (2) |
| மொத்த பரப்பு | | 2.45.60 | | |

மேற்படி சொத்தின் தற்கால அரசு மதிப்பு இணைய வழிகாட்டி மதிப்பீட்டின் படி ரூ.58,16,00,800 (ஐம்பத்தெட்டு கோடியே பதினாறு லட்சத்து எண்ணூறு மட்டும்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலே அட்டவணையில் கண்டுள்ள சொத்துக்கள் 04.08.2025 அன்று காலை 11.30 மணியளவில் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கிளாம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்தில் பொது ஏலத்தில் விடப்படும். இதனை பொது ஏலத்தில் எடுக்க விரும்புவோர் 15% வங்கி வரையோலை தகுதிபெற்ற அலுவலர் மற்றும் வட்டாட்சியர் வண்டலூர் பெயரில் இந்த விளம்பரம் வெளியான தேதிக்கு பின்னர் எடுக்கப்பட்ட வங்கி வரையோலையை சமர்ப்பித்து ஏலம் கேட்கலாம். இது தவிர எழுத்து மூலம் ஏலம் கோருபவர்கள் தாங்கள் கோரும் ஏலத்தொகையை எழுத்து மூலமாக வட்டாட்சியர் வண்டலூர் என்ற பெயரில் 15% க்கு எடுக்கப்பட்ட வங்கி வரையோலையுடன் வட்டாட்சியர் வண்டலூர் என்ற முகவரியிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட கவர் மூலம் வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் 04.08.2025 அன்று காலை 11.00 மணிக்குள்ளாக சேர்த்துவிடுமாறு அனுப்பி வைக்கலாம்.

மேற்படி இடங்களைப் பார்வையிட விரும்புவோர் 28.07.2025க்குள் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கிளாம்பாக்கம் கிராமம், கிராம நிர்வாக அலுவலருக்கு தெரிவித்துவிட்டு இடத்தை பார்வையிடலாம். ஏல நாள் அன்று பொது ஏலம் மற்றும் எழுத்து மூலமாக கோரப்பட்ட ஏலதொகை இதில் எது அதிகமானதோ அந்த தொகைக்கு ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படும். மேற்படி இடத்தை பொது ஏலத்தில் கிரயம் வாங்குபவர் ஏல இடத்திலேயே பணமாகவோ அல்லது வங்கி வரையோலையாகவோ, வட்டாட்சியர் வண்டலூர் பெயரில் முழுத்தொகையினை செலுத்த வேண்டும். (பத்திரப் பதிவு கட்டணம் தனி) என்றும் மேற்படி பொது ஏலம் அரசு சட்டத்திற்கு உட்பட்டதாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வண்டலூர் வட்டாட்சியர் தலைமையில் ஏலம் விட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் நடைமுறையில் உள்ள அரசாரணையின்படி வண்டலூர் வட்டத்தில் அதிக அளவு விற்பனையாகும் ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் உரிய விளம்பரம் கொடுக்கவும் உரிய மனுதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறும் வண்ணம் நாளேடுகளில் விளம்பரம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்த விளம்பரத்திற்கான நிதியாதாரம் எங்களிடம் உள்ளது. ஏற்கனவே பிரசுரம் செய்யப்பட்டதற்கு நிதி நிலுவை ஏதுமில்லை. இதன் அடிப்படையில் உரிய விளம்பரம் நகல் இத்துடன் இணைத்துள்ளேன். இவைகளை தமிழ் ஆங்கிலம் நாளிதழிகளில் பிரசுரம் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செ.ம.தொ.இ/730/வரைகலை/2025
வட்டாட்சியர், வண்டலூர்



ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!



**intellect** live your dream **இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்**
(CIN: L72900TN2011PLC080183)
பதிவு அலுவலகம் : எண்.244, அண்ணா சாலை, சென்னை 600 006.
தலைமை அலுவலகம் : ப்ளாட் எண்.3/G-3, சிப்காட் IT பார்க், சிறுசேரி, சென்னை 600 130.
மின்னஞ்சல் : shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com
இணையதளம் : www.intellectdesign.com தொலைபேசி : 044-6700 8000 ஃபேக்ஸ் : 044-6700 8874

**இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட் நிறுவனத்தின் 14-ஆவது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு**

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால் பல்வேறு MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளின்படி, நிறுவனத்தின் 14வது ஆண்டு பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வணிகங்களை பரிவர்த்தனை செய்வதற்காக, இன்டலெக்ட் டிசைன் அரீனா லிமிடெட் ("நிறுவனம்") நிறுவனத்தின் 14வது ஆண்டு பொதுக்கூட்டம் ("AGM") ஜூலை 25, 2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு (IST) காணொலி ("VC வசதி") அல்லது பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் மற்றும் SEBI அக்டோபர் 03, 2024தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133-க்கு இணங்கவும் வருடாந்திர பொதுக் கூட்டம் குறித்த அறிவிப்பின் மின்னணு நகல்கள், மின்னணு வாக்கு அளித்தல் பற்றிய நடைமுறை / விதிகள் உடனும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையுடனும் கூடியதாக நிறுவனம் /RTA/ டெபாசிட்டரிகள் உடன் தங்கள் இமெயில் முகவரிகளைப் பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

14 ஆவது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு, 2024-25 நிதி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையுடன் நிறுவனத்தின் https://www.intellectdesign.com/investor-relations/ இணையதளத்தில் உள்ளது. மேலும் அவற்றை பங்கு சந்தைகளின் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.comல் மற்றும் டெபாசிட்டரியின் இணையதளம் https://www.evoting.nsdl.com ல் காணலாம்.

இயக்குநர்கள் குழு மே 09, 2025 அன்று நடைபெற்ற தங்கள் கூட்டத்தில் இறுதி ஈவுத்தொகையாக ரூ.5/– முகமதிப்பு உடைய சமவீதப்பங்கு ஒன்றுக்கு ரூ.4/– மேலும் சிறப்பு ஈவுத்தொகை ரூ.3/– பரிந்துரை செய்தது. நிதி ஆண்டு 2024-25 க்கான இறுதி ஈவுத் தொகைக்கான நோக்கத்திற்கான பதிவு தேதி (record date) ஜூன் 18, 2025. இறுதி ஈவுத் தொகை, உறுப்பினர்களின் அங்கீகாரம் பெறும் பட்சத்தில், வருடாந்திர பொதுக் கூட்டம் முடிந்த 30 நாட்களுக்குள் வழங்கப்படும். மின்னணு வங்கி கட்டாயம் என்பதில் பதிவு செய்யாமல் இருந்தால் மின்னணு செலுத்தல் சேவை என்ற எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீஸ் அல்லது பிற வழிமுறையில் ஏதேனும் உறுப்பினருக்கு அவர்கள் வங்கி கணக்கில் நிறுவனம் செலுத்த முடியாத நிலையில், நிறுவனமானது, அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஈவுத் தொகை வாரண்ட் / வங்கியாளர் காசோலை / டிமாண்ட் டிராப்ட் அனுப்பி வைக்கும்.

கூடுதலாக, ஏப்ரல் 1, 2024 முதல் அமலுக்கு வரும் SEBI சுற்றறிக்கையின்படி, KYC விவரங்களுடன் புதுப்பிக்கப்படாத பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அதாவது (i) PAN (ii) Pin குறியீட்டுடன் தொடர்பு விவரங்கள் (iii) மொபைல் எண், (iv) வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் (v) கையொப்பம் மின்னணு முறையில் மட்டுமே ஈவுத்தொகையைப் பெற தகுதியுடையவர்கள். அதன்படி, AGM-ல் ஒப்புதலுக்கு உட்பட்டு, இறுதி ஈவுத்தொகையின் பணம், தேவையான KYC விவரங்கள் அவர்களின் ஃபோலியோக்களில் முறையாகப் புதுப்பிக்கப்பட்ட பின்னரே பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.

நிதி சட்டம் 2020க்கு இணங்க, ஏப்ரல் 01, 2020 லிருந்து பங்குதாரர்களின் வசம் ஈவுத் தொகை வருமானம் வரிப்பிடித்தத்திற்கு உட்பட்டது ஆகும். அதனால், நிறுவனமானது, உறுப்பினர்களுக்கு இறுதி ஈவுத் தொகையை வழங்கும் தருணத்தில் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் வரிப்பிடித்தம் பிடிக்க வேண்டியது அவசியம்.

இருப்பினும், 2024-25 நிதி ஆண்டில், இங்கு வசிக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் பெற வேண்டிய மொத்த ஈவு தொகை, ரூ.10,000/-க்கு மிகாமல் இருக்கும் நிலையிலும் வருமான வரி சட்டம் 1961–ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பங்குதாரர்கள் படிவம் 15G /படிவம் 15 H தரும் நிலையிலும் (அதாவது 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது உள்ள தனிப்பட்டவர்களுக்கு) வரி பிடித்தம் செய்யப்படமாட்டாது. படிவம் 15G /15H இணைய இணைப்பு https://investors.cameoindia.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த பயனைப் பெறுவதற்கு ஜூலை 18, 2025 அன்று இந்திய நேரப்படி இரவு 11.59 மணிக்குள் investor@cameoindia.com க்கு இமெயில் அனுப்ப வேண்டும். நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவர் ஆன மெசர்ஸ். கேமியோ கார்ப்பரேட் சர்வீஸஸ் லிமிடெட், இணைய இணைப்பு https://investors.cameoindia.com ல் படிவம் 15G /15H பதிவேற்றம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. பங்குதாரர்கள் கவனத்திற்கு : தங்கள் PAN எண் பதிவு செய்யப்படாமல் இருந்தால் அல்லது செல்லுபடி ஆகாத PAN வைத்திருந்தால் பொருந்தத்தக்க வகையில், சட்டத்தின் பிரிவு 206AA ன் கீழ், உயர்ந்த வீதத்தில் வரி பிடித்தம் செய்யப்படும்.

இங்கு வசிக்காத பங்குதாரர்களைப் பொறுத்த வரை, வருமான வரி சட்டம் 1961–ன் மற்றும் பிற பொருந்துகிற பிரிவுகளின் கூறுகளின் படி மற்றும் பிரிவு 195 கூறுகளின் படியும் நடைமுறையில் உள்ள வீதங்களில் வரிகள் பிடிக்காமல் நிறுத்தி வைத்துக் கொள்ளப்படும். செலுத்தப்பட வேண்டிய ஈவுத் தொகைக்கான பிடிக்காமல் நிறுத்தப்படும் வரி என்பது இந்திய அரசாங்கத்தால் அறிவுறுத்தி உள்ளபடி, 20% வீதத்தில் (+ பொருந்தும் மேல்வரி மற்றும் செஸ்) இருக்கும்.

இங்கு வசிக்காத பங்குதாரர்கள், பின்வரும் அம்சங்களை investor@cameoindia.com க்கு இமெயில் மூலம் சமர்ப்பிப்பதன் பேரில், இந்தியா மற்றும் அவர்களது நாட்டுக்கும் இடையேயான வரி சார்ந்த ஒப்பந்தத்தின் கீழ், நன்மை உள்ள வீதங்களைப் பெறலாம் – அவையாவன – நிரந்தர ஸ்தாபனம் மற்றும் பயன்தரும் சொந்தமானவை இல்லை என்கிற பிரமாணம், வரி வசிப்பிட சான்றிதழ், படிவம் 10 F மற்றும் வரி ஒப்பந்த பயன்களை பெறுவதற்கு உரிய இன்ன பிற ஆவணங்கள். இந்த பயனைப் பெறுவதற்கு ஜூலை 18, 2025 அன்று இந்திய நேரப்படி இரவு 11.59 மணிக்குள் இமெயில் அனுப்ப வேண்டும்.

14 ஆவது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் பற்றி தங்கள் வாக்குகளை தொலைதூர இ–வோட்டிங் மூலம் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் இ–வோட்டிங் மூலம் உறுப்பினர்கள் தங்கள் வாக்குரிமையை செலுத்த நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

அனைத்து உறுப்பினர்களும் கவனத்தில் கொள்ளவும் :

1. இ–வோட்டிங்–ல் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்பதற்கான விதிகளும் பிசிகல் வடிவத்தில் தங்கள் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், தங்கள் இமெயில் முகவரிகளை பதிவு செய்து கொள்ளாதவர்கள் இ–வோட்டிங்–ல் தங்கள் வாக்குகளை எவ்வாறு செலுத்த வேண்டும் என்கிற தகவல்களும் 14 ஆவது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பின் ஒரு பகுதியாக கொடுக்கப்பட்டுள்ளன.
2. கெடுத் தேதியான ஜூலை 18, 2025 தேதி வரை தங்கள் பங்குகளை பிசிகல் வடிவத்தில் அல்லது டீமெடீரியலைசுடு (dematerialized) வடிவத்தில் வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை மின்னணு ரீதியாக செலுத்த முடியும். அதன் பின்னர், வாக்கு ஏற்பதை இ–வோட்டிங் மாட்யூலில் NSDL நிறுத்தி விடும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் காணொலி / பிற ஒலி ஒளி சாதனங்கள் மூலம் வருகை தர உள்ள உறுப்பினர்கள் தொலைதூர இ–வோட்டிங் மூலம் தீர்மானங்கள் குறித்து தங்கள் வாக்குகளை பதிவு செய்யாத பட்சத்தில், அவர்கள் வாக்கு அளிப்பது தடுத்து வைக்கப்படாத நிலையில், அவர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்தில் இ–வோட்டிங் சாதனங்கள் மூலம் வாக்கு அளிக்க தகுதி உண்டு.
3. தொலைதூர இ–வோட்டிங் என்பது ஜூலை 22, 2025 செவ்வாய்க்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு தொடங்கும்; ஜூலை 24, 2025 வியாழக்கிழமை அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடையும். உறுப்பினர்கள், தீர்மானம் மீது வாக்கு அளித்த பின்னர், இதனை மாற்றிக் கொள்ள அனுமதி கிடையாது.
4. இ–வோட்டிங் வழிமுறையில் ஏற்கனவே தங்கள் வாக்குகளை செலுத்தி விட்ட உறுப்பினர்கள் 14 ஆவது வருடாந்திர பொதுக் கூட்ட செயல்களில் பங்கேற்க முடியும்; ஆனால் அவர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்கு அளிக்க முடியாது. காணொலி / பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக பங்கேற்பது பற்றிய விரிவான விதிகள் 14 ஆவது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் இடம் பெற்றுள்ளன.
5. இது வரை தங்கள் இமெயில் முகவரிகளை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள், அவர்கள் தங்களது பங்குகளை மின்னணு வடிவத்தில் வைத்திருந்தால் டெபாசிட்டரி(கள்) உடன் அதனை பதிவு செய்து கொள்ள வேண்டும். பிசிகல் வடிவத்தில் வைத்துள்ள உறுப்பினர்கள், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவர் கேமியோ கார்ப்பரேட் சர்வீஸஸ் லிமிடெட், "சுப்ரமணியன் கட்டிடம்" நெ.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை – 600 002 க்கு கடிதம் எழுதி பதிவு செய்து கொள்ள வேண்டும்.
6. இ–வோட்டிங் தொடர்பான விசாரணைகளுக்கு :
   அ) டிமாட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் இங்கு வசிக்காத தனிப்பட்ட உறுப்பினர்களும் காப்புறுதிகளை (செக்யூரிட்டிகள்) வைத்திருக்கும் உறுப்பினர்களும் தொடர்பு கொள்ளவும் : கேமியோ கார்ப்பரேட் சர்வீஸஸ் லிமிடெட் - 044-4002 0700 அல்லது அவர்களுக்கு எழுதவும் : cameo@cameoindia.com
   ஆ) NSDL மூலம் தங்கள் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்கள் NSDL ஹெல்ப் டெஸ்க் e-voting@nsdl.com க்கு எழுதி அறியலாம் அல்லது அழையுங்கள் டோல் ஃப்ரீ எண், 022-48867000
   இ) CDSL மூலம் தங்கள் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்கள் CDSL ஹெல்ப் டெஸ்க் helpdesk. e-voting@cdslindia.com க்கு எழுதி அறியலாம் அல்லது அழையுங்கள் : 1800 22 55 33
   ஈ) தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் செய்துள்ள வசதிகள் மூலம் வாக்கு அளிக்கும் உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரை அவர்களின் ஹெல்ப் லைன் / தொடர்பு விவரங்கள் மூலம் தொடர்பு கொள்ளவும்.
7. கூட்டத்தில் ஒரு பேச்சாளர் ஆக, தங்கள் கருத்துக்களை தெரிவிக்க விரும்பும் / கேள்வி கேட்க விரும்பும் உறுப்பினர்கள், அதற்காக, ஜூலை 14, 2025 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) முதல் ஜூலை 24, 2025 (இந்திய நேரப்படி மாலை 05.00) வரையான காலத்தில் , அவர்களுடைய பதிவு செய்துள்ள இமெயில் லிருந்து அவர்களின் பெயர்கள், DP ID, & கிளையண்ட் ஐடி / ஃபோலியோ எண், PAN & மொபைல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு naresh.vv@intellectdesign.com (அ) company.secretary@intellectdesign.com க்கு இமெயில் அனுப்பி தங்களை முன்பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். இவ்வாறு தங்களை முன்பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் மட்டுமே வருடாந்திர பொதுக் கூட்டத்தில் ஒரு பேச்சாளர் ஆக தங்கள் கருத்தை தெரிவிக்க / கேள்வி எழுப்ப அனுமதிக்கப்படுவார்கள்.
8. 2024-25 நிதி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை தொடர்பாக அல்லது வருடாந்திர பொதுக் கூட்டம் தொடர்பாக, ஏதேனும் விசாரணை / ஐயப்பாடுகளுக்கு அல்லது உதவிக்கு உறுப்பினர்கள் பின்வரும் இமெயில் முகவரிகளுக்கு எழுதி அனுப்ப வேண்டும்: company.secretary@intellectdesign.com (அ) naresh.vv@intellectdesign.com

இயக்குநர் குழுவின் ஆணைப்படி
இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்
கையொப்பம்
V.V. நரேஷ்
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஜூலை 02, 2025